செய்தி வெளியீடு எண்: 513 நாள்: 09.03.2024

**<u>செய்தி வெளியீடு</u>**

**காவல்துறை சார்பில் நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்களின் செயல்பாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 4 நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்களின் செயல்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, அவ்வாகனங்களுக்கான சாவியினை சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப., அவர்களிடம் வழங்கினார்.

நவீன தொழில்நுட்பங்களை கொண்டு உள்நாட்டு பாதுகாப்பு சவால்களை காவல்துறை அதிகாரிகள் திறம்பட கையாளுவதற்காக மாநில காவல் படைகளின் நவீனமயமாக்கல் (Modernisation of Police Force) திட்டத்தின் கீழ் 93.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மெகா சிட்டி திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 1030 இடங்களில் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்துடன் நிறுவப்பட்ட 3090 Artificial Intelligence–ஆல் இயங்கும் CCTV கேமராக்கள், 753 வாகன கண்காணிப்பு சாதனங்கள், 7 வான்வழி கண்காணிப்பு ட்ரோன்கள் மற்றும் 7 நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் நகரம் முழுவதும் விரிவான கண்காணிப்பு உறுதி செய்யப்படுகிறது.

அதன் முதற்கட்டமாக, 4 நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்கள் (Mobile Command and Control Centre–MCCC) நகர கண்காணிப்புக்காக பயன்படுத்த தயாராக உள்ளது. மேலும், 2250 கேமராக்கள் மற்றும் 650 வாகனங்கள் நிகழ்நேர கண்காணிப்பிற்காக தானியங்கி வாகன இருப்பிட அமைப்புடன் (Automatic Vehicle Location System – AVLS) நிறுவப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர காவல் நிலையங்களில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு, நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள ட்ரோன்கள் மற்றும்

CCTV கேமராக்கள் நிகழ்நேர வீடியோ பதிவுகளை அனுப்புகின்றன. MCCC வாகனங்கள் நகரம் முழுவதும் முக்கியமான பொதுக்கூட்டங்கள், போராட்டங்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் இடங்களில் நிறுத்தப்பட்டு நிகழ்நேர வீடியோவை பதிவு செய்ய தேவைக்கேற்ப பயன்படுத்தப்படும்.

நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இரண்டு நைட் விஷன் ட்ரோன்கள், ஒருங்கிணைந்த கேமராக்கள் மற்றும் ஒலிப்பெருக்கி அமைப்புகள் மேம்பட்ட சூழ்நிலை விழிப்புணர்விற்கான வான்வழி பார்வையை வழங்குகின்றன மற்றும் போக்குவரத்து நெரிசலை கண்காணித்து சரி செய்யவும் பயன்படுத்தப்படும். இந்த அம்சங்கள் அவசர காலங்களில் திறமையான தகவல்தொடர்புக்கு பயன்படும்.

இந்த நிகழ்ச்சியில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., காவல்துறை தலைவர் (தெற்கு மண்டலம்) திரு. பிரேம் ஆனந்த் சின்ஹா, இ.கா.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

...............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in